REGD No M 4842

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

ர் 10. | 30-9-51 | இதழ் 14.

நம்பாதே! நம்பாதே!!

[அரங்கண்ணல்]

லவன் போல் பேசிடுவான்
சொல்லாலே தியாகி!

நலத்துக்காக நாட்டைக்
கெடுக்கும் நாசத் துரோகி!

வனே நம்பாதே! நம்பாதே!!
நம்பாதே!!!

* * *

ருத்தில் துரோக நினைவும், ில் மூவர்ணக் கொடியும், டுக் கதருடையுமாக வேடந் கிய திருமூர்த்திகள் ஜில்லாக் வட்டமிடத் துவங்கியுள்ளன பொதுத் தேர்தல் நெருங்குவ காங்கிரஸ் கட்சியின் சார்பில் ரவரைப் பிடிக்கலாம், எந் ந்த இடத்தில் நிறுத்தலாம், தனே "வகைகளில்" லாபம், று கணிக்கும் வேலையில் ங்கியிருக்கும் காமராஜர், ஆங் கே போகுமிடங்களில், நம்மைப் ிபும் பேசத் தவறுவ ியாம்!!

"யார் இருக்கிறார்கள், எங் களைத் தவிர — இந்நாட்டை நல்ல முறையில் ஆள?"

று, வாலிழந்த நரி கதறுமாமே, தட் போலச் சிறிது நேரம் த்துவிட்டு,

"நாட்டைப் பிரிக்கவேண்டு மாம்! பிரிக்கலாமா ஐயா. என்ன பித்துக்குளித்தனம் இது?"

என்றும், வெகு காரத்துடன், கேட்கிறாராம்.

விருதுநகரத்தாருக்கு தேர்தல் பயம் அதிகரிக்க அதிகரிக்க ஆத்திர மும் ஆயாசமும் அதிகமாகின்றன போலும்! காய்ச்சலால் பீடிக்கப் பட்டு படுக்கையில் "ஜன்னி" கண்டவன் உளறுவது சகஜம். அந்த ரகத்தில் இருக்கும் அன்பரின் வார்த்தைகள், நமக்குப் பரிதாபத் தைத்தான் கொண்டு வருகின்றன.

* * *

ஏழையின் கண்களிலிருந்து அருவி போலக் கொட்டும் நீர், அம்மா அம்மா, என்று அழும் குழந்தையின் குரலில் ஒலிக்கும் 'ஐயோ! ஐயோ!' என்கிற ஓலம், மரக்கிளைகளிலே பிணமாகத் தொங் கும் மக்கள் கூட்டம்! கல்லையும் கரைக்கும் இக்காட்சிகள், மக்கள் மனதில் உடுமலைக் கவிராயரின் 'நம்பாதே! நம்பாதே!' என்கிற பாடலின் கருத்தையே கொண்டு கிடக்கின்றன. "சுதந்திரம் வந்த துன்னு சொல்லாதீங்க — சும்மா, சும்மா வாயை மெல்லாதீங்க!" என்றே, வீட்டிலும் நாட்டிலும், மக்கள் பேசுகிறார்கள். இத்தகைய 'விருது'கள் இந்த ஐந்து ஆண்டு களில் கிடைத்திருக்கின்றன, காங் கிரஸ் ஆட்சிக்கு!

இருந்தும் காங்கிரஸ் ஓடேந்தி கள், நம்மைத் தாக்குவதும், நமது முழக்கத்துக்கு 'பித்துக் குளித் தனம்' என்று பெயர் சூட்டி மகிழ் வதுமாக 'தெந்தினு' பாடித்திரிகின் றனர்.

* * *

"பிரிந்து போகும் மனோபாவம் கூடாது; ஆகாது. அர்த்தமற்ற கூச்சல் அது"—நெடு நாட்களாகவே இந்த ஓடேந்திகள் கூறி வருகின்ற னர், இவ்விதம்.

நாமும், பல ஆதாரங்களோடு, நாம் ஒரு தனியாட்சி நிறுவவேண் டும் என்பதை வலியுறுத்தி வரு கிறோம்.

'இந்தியா' என்கிற கூட்டுச் சிறைக்குள் ஏற்படும் விபரீதங்களை யும் வேதனைகளையும் பட்டியல் பட்டியலாகத் தந்து வருகிறோம்.

புள்ளி விபரங்கள், சரித்திரச் சான்றுகள், பொருளியல் பேரம் இத்தனையையும் ஆதாரமாகக்காட்டி வருகிறோம்—நமது கோரிக்கைக்கு.

நமது ஆதாரங்களை மறுத்தோ, 'இல்லை—தவறு' என்று காரணத் தோடு மெய்ப்பித்தோ, காட்டியது கிடையாது காங்கிரஸ் வாதிகள்.

அவர்கள், நமது முழக்கம் பற்றி கிண்டல், கேலி, [illegible]

வைகளை விசுவரே தவிர, வாதத்துக்கு வருவதா கிடையாது. சட்டியில் இல்லை! ஆகவே அகப்பையிலும் வருவதில்லை!!

*　*　*

டில்லி—ஒரு சர்வாதிகார பீடம். அதன் சுகத்துக்கு நமது வாழ்க்கை பலியிடப்படுகிறது. நம்மைச் சுரண்டுவதில் டில்லி கவனம் செலுத்துகிறதே தவிர, நமது நலனில் அக்கரை கிடையாது என்று நாம் கூறி வருகிறோம்.

நம் கூற்றை மெய்ப்பிக்கும் பல காட்சிகளை, அன்றுடம், டில்லி தர்பாரும் காட்டாமலில்லை.

உணவு, நூல்
அணைத்தேக்கம்
ஆலைகள் வளர்ச்சி
நிதி உபகாரம்.

முதலாய காரியங்களில் டில்லிபீடம் காட்டிவரும் ஓரவஞ்சனையை நாம் பலமுறைகள் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

காங்கிரஸ் மந்திரிகளில் பலரும் கூட, இதுபோன்ற விஷயங்களில் தங்கள் வேதனைகளைத் தெரிவிக்கத் தவறவில்லை.

காவடி தூக்கி ஓடுவதும், டில்லி தலைமேல் அடித்து விரட்டுவதும், அந்த வேகத்தில் இங்கே வந்து அலறுவதும், பிறகு 'தெந்தினா'பாடுவதும், இங்குள்ள மந்திரிகளின் வழக்கமாகிவிட்டது!

இருந்தும், நம்மைப்பற்றி பேசும் போது, 'பிரிவினை கூடாது — அது அர்த்தமற்ற கூச்சல்'' என்று ஆலாபனம் செய்யத் தவறுவதில்லை!

*　*　*

டில்லி—இங்கிருந்து பணத்தைச் சுரண்டிச் செல்வதுமட்டுமல்ல.

ஆலைகளை அங்கேயேஉண்டாக்குவதுமட்டுமல்ல.

இங்கு தப்பித் தவறி இருப்பவைகளைக்கூட வடக்கேயே கொண்டு செல்கிறது!

அந்தளவுக்கு வெறியோடு வேலை செய்து வருகிறது, மத்திய சர்க்கார். அடிக்கடி இத்திருக் கைங்கரியம் நடைபெற்றுவருகிறது 'டில்லி'யால்.

இத் திருவிளையாடல்களை தேசிய இதழ்கள் மறைத்து விடுவதால் பலருக்குத் தெரிய முடிவதில்லை.

சென்னை மாநிலத்தில் கூனூரில் இருக்கும் உணவுப்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தை, இந்த மாகாணத்துக்கு வெளியே கொண்டுபோய் அமைப்பதென இந்திய சர்க்கார் ஏற்பாடுகள் செய்துவருகிறார்கள்.

உணவுப் பொருள் ஆராய்ச்சிக் கழகம், மிகமிகப் பொறுப்புள்ளதும் இன்றியமையாததுமான ஆராய்ச்சிகளைக் கண்டு வருவதாகும்.

தென்னிந்தியாவுக்கே இந்த ஒரே ஒரு ஆராய்ச்சிக் கூடந்தான் இருந்து வருகிறது.

மனிதனுக்குப் போதுமான போஷணை இல்லாமையால் வியாதிக்கு ஆட்பட்டு வீணாகிறான்—பிணமாகிறான். உணவுப் பொருள்காரணமாக, இது போன்ற வியாதிகள், தென்னாட்டில்தான் அதிகமாகப் பரவி வருவதாக நிபுணர்கள், அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

மனிதனின் உடல் உரம் பெற வேண்டுமானால் அதற்கு எத்தகைய உணவு தேவை, அது எந்தெந்த அளவில் இருக்க வேண்டும், அதற்கான வழி வகைகள் என்னென்ன, என்பனவற்றை ஆராய்ந்து தெரிவிப்பதே இக்கழகத்தின் செயலாகும்.

உணவுப் பொருள் குறைவால், அடிக்கடி திராவிடத்தில் பற்பல பொருள்கள், சமையலுக்காளாக்கப்படுகின்றன.

சத்துக் குறைவுள்ள ஆகாரம் உட்கொள்ளப்படுவதாலேயேதென்னாட்டில், உணவு சம்பந்தமான வியாதிகள் அதிகமாகிக்கொண்டே உள்ளன.

இந்தக் கேட்டைத் தவிர்க்க பணியாற்றுவது, உணவுப் பொருள் ஆராய்ச்சிக் கழகம்.

அதுவும் ஒன்றே ஒன்று, இருக்கிறது, இங்கு.

அது இங்கிருப்பது கூடாதாம்—மாகாணத்தை விட்டுவேறெங்காவது கொண்டுபோகப்பட வேண்டுமாம்.

கூறுகின்றது, டில்லி சர்க்கார்.

அதற்குக் காரணம் என்னவென்றால்:

1. கழகத்துக்கான போதிய இடவசதி இல்லை.

2. கழகத்தின் ஆராய்ச்சி[க்] உதவும் வகையில் பெரிய ஆ[ஸ்பத்]திரிகள் கூனூரில் இல்லை.

இவைகளைக் காரணமாகக் கா[ட்டி]யிருக்கின்றனர், மத்யசர்க்கார்.

இந்தக் காரணங்கள் மிக[ச்] சாமான்யமானவை!

ஏனெனில், கழகத்துக்கு வே[ண்]டிய இடவசதியை சென்[னை]கருகில் செய்து தருவதாக சென்[னை] அரசியலார் தெரிவித்திருக்கி[றார்]கள்.

சென்னைக் கருகிலிருந்தா[ல்] ஆராய்ச்சிக்குதவும் பெரிய ஆஸ்[பத்]திரிகள் இருப்பதையும் கு[றி]ப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

சென்னையில் ஐந்து பெரிய ஆ[ஸ்]பத்திரிகள் இருக்கின்றன. ஒரு க[ா]ஆஸ்பத்திரியும் இருக்கிறது.

இருந்தும், டில்லி, மேற்ப[டி] கழகத்தை இங்கிருந்து கொண்[டு] செல்லும் உத்தேசத்திலேயே இரு[க்]கிறது.

நமக்கென, இருப்பது ஒன்[று].

அது, கண்ணை உறுத்துகிறது டில்லிக்கு. இங்கிருந்து அகற்றப்ப[ட] வேண்டுமென ஆசைப்படுகிறது.

*　*　*

இதுதான் முதல் தடவை அல்[ல]. முன்பொரு முறை கோவை[]யிலிருந்த காட்டிலாகா ஆராய்ச்சி[க்] கழகத்தை டேராடூனுக்குக்கொண்[டு] போக வேண்டுமென்று, கட்ட[ளை] பிறப்பித்தது, பலருக்குக் கவன[ம்] இருக்கலாம்.

*　*　*

வஞ்சனை நிரம்பிய குள்ளநரி[ச்] செயலில், டில்லியார் நடந்து வ[ரு]கிறார்கள்.

நமக்கான நன்மைகளைச்செய்வ[து]மில்லை.

அதே நேரத்தில் தீமைகளை[ச்] செய்யாமலுமிருப்பதில்லை.

அவ்வளவு குறுகிய மனோபாவ[ம்] கூத்தாடுகிறது—வடநாட்டில்.

ஆனால், நமது காங்கிரஸ் பிர[முக]ர்கள், அந்த குறுகிய மனோபாவ[த்]துக்குத் திரை போடுகிறார்கள்.

நம்மைக் கண்டிப்பதன் மூல[ம்] திரைபோடும் வேலையைத் திற[மை]யாகச் செய்வதாகக் கருதுகிறார்க[ள்].

11-ம் பக்கம் பார்க்க

ரோமாபுரி ராணிகள் 2-4-0
கம்பரசம் 1-8-0
குமரிகோட்டம் 1-0-0
கற்பனைச்சித்திரம் 1-0-0
அறப்போர் 1-0-0
1858-1948 1-0-0
சிறுகதைகள் 1-0-0
உலகப்பெரியார் காந்தி 1-0-0
பணத்தோட்டம் 1-0-0
தீ பரவட்டும் 1-0-0
அண்ணாவின் ஆறு கதைகள் 1-0-0
நாம் 1-0-0
வர்ணாஸ்ரமம் 0-12-0
நிலையும் நினைப்பும் 0-12-0
மே தினம் 0-5-0
அவர்கள் சந்திப்பு 0-3-0

அரங்கண்ணல்

ரஸ்புடீன் 1-8-0
இதயகீதம் 0-12-0
இருளும் ஒளியும் 1-8-0

(தில்லை வில்லாளன்)

BALU BROS

...ராவிடப் பண்ணை

பெரியண்ணன்

"வளமிருந்த நாடிருந்தும் ஓடிவந்தேன்! வஞ்சகம், அங்கே என்னை வாழவிடவில்லை. செல்வச் சிற்றாறுகள், சிந்து பாடும் வயல் காடுகள், எல்லாம் உண்டு. இருந்தும் நான் ஓடிவந்தேன்! பரந்த பூமி—என் தாய்நாடு. ஆனால் என் பசிபோக்கச் சோறில்லை! வேலையில்லை!! மனைவியின் கண்ணீர், தாயின் ஓலம், தவிக்கும் குழந்தை, எல்லோரையும் பிரிந்தேன். கப்பலேறினேன். அக்கரைச் சீமை சென்றாவது நம் அல்லலைத் தீர்த்துக் கொள்வோம், என்ற ஆசையோடு வந்தேன். தேயிலைக்காடு. அங்கே நான் மிருகமானேன்! வெயிலும், பாம்பும், பூச்சிக்கடியும் குளிர்ஜுரமும், என்னைச் சித்திரவதை செய்தன—நான் கலங்கவில்லை, தமிழ்பூமியில் தவிக்கும் குடும்பம் வாழ சம்பாதிக்க வேண்டுமே என்பதால். இரப்பர் காடு! அங்கே, பாய்ந்தோடும் கொடூரமிருகங்கள் — அவைகளை விட மிரட்டி விரட்டும் மனித மிருகங்கள்—அவைகளின் அட்டகாசம், அதனால் என் உடம்பிலேறிய தழும்புகள்! அப்பப்ப! ஏனோ, பிறந்தேன்?"

* * *

கண்ணீர் வடித்து, கடலலைகளோடு தங்கள் துயரங்களைப்பேசி,க் காலங்கழித்துவரும் கடல் கடந்த திராவிடமக்கள் லட்சோபலட்சம்!

இந்திய பூமியிலேயே, பொன் விளையும் நாட்டை விட்டு, புசிக்க வழியில்லாததால் கடல் கடந்து ஓடியோரின் மிகப் பெரும்பாலோர், தமிழர்கள் தான்.

வளம் நிரம்பிய நாடு இது! ஆனால் வறுமையால் தன் மக்களை விரட்டியடித்திருக்கிறது வெளி நாடுகளுக்கு!

வெளிநாடுகள் சென்று தோட்டத்து தொழிலாளியாகவும், பாட்டாளியாகவும் பாடுபடும் இனம், திராவிட சமுதாயத்தைத் தவிர வேறில்லை.

வடநாட்டான் சென்றாலோ, பாங்கியோடு போகிறான்! வியாபாரியாகிறான்! வெளி நாடுகளிலும் சுரண்டுகிறான்!!

ஆனால் திராவிட மகனே, உடலைப் பிழிந்து உழைத்து, தேயிலைக் காட்டிலும் ரப்பர் தோட்டத்திலும், பூச்சிக்கும் நோய்க்கும் இரையாகி பிணமாகிறான்!

நெஞ்சு கொதிக்கும் நிகழ்ச்சி இது! இதையும் மீறும் சம்பவங்கள் இப்போது நமக்குத் தெரிய வருகின்றன!!

உழைக்கச் சென்று, காலொடிந்து கண்ணிழந்து, கதிகெட்டுப் போவது மட்டுமல்ல, வெளிநாடுகளிலே குண்டுக்கும் தூக்குமேடைக்கும் நம்மனோர் இரையாகிக் கொண்டே உள்ளனர்!

மலேயாவில், பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, தூக்குமேடைக்குக் கொண்டு செல்லப்படும் தமிழக மைந்தர்களின் பெயர்கள் நம்மைக் கலங்கச் செய்யும்.

முன்பு கணபதி மாண்டார்! அவருக்குப்பின் பலர் பெற்றனர், அந்தப் பரிசுகளை! இப்போது பெரியண்ணன் என்பவர் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறார்.

ஆனால் தனக்கு அவ்வித எண்ணமில்லையென மறுத்திருக்கிறார், அத் தமிழ் இளைஞர்.

வயது 22-ம்! அவருக்கு இந்த நிலை!! வறுமை போக்கச் சென்ற தமிழ்ச் செல்வன்—தூக்கு மேடையில்! புனல் நிரம்பிய நாட்டுக்குரியோன், கண்களிலே புனல் ததும்ப கடல்கடந்த பிரதேசத்திலே நிற்கிறான், தூக்குமேடையில்!

இச்செய்தி கேள்வியுற்றால் அவனது தந்தையும் தாயும் என்னபாடு படுவர்!

இந்தக்கோர நிலை தவிர்க்க, இந்திய சர்க்காரின் தூதுவர் கோபால் மேனன் முயலுகிறார், என ஒரு தகவல் பெறுகிறோம்.

அவர் முயற்சி, செல்வத்தின் உயிரை, நமக்குத் தரட்டும்! பெரியண்ணன் உயிர் காப்பாற்றப்படட்டும்.

இந்த நற்சேவையில், தங்கள்முழு கவனத்தையும் இந்த சர்க்கார் செலுத்தட்டும்! வாழ்விழந்து ஓடிய அந்த வாலிபன்—சாகாமலாவது தடுக்கட்டும்!! ஐயோ, திராவிடமே—நீ வளம் நிரம்பிய நாடாமே! இதுவா உன் மக்களுக்கேற்படும் கதி?

★

துவஜா ரோஹணம்!

—கரிகாலன் —

★

ஹிந்தி ஏகாதிபத்தியத்தின் முடிசூடா மன்னர், ஹிந்துமத சாம்ராஜ்யத்தின் ஏகப் பிரதிநிதி, மாஜி காங்கிரஸ் ராஷ்டிரபதி, ராஜரிஷி தாண்டன் தனது முற்கால நடவடிக்கைகளுக்கு இன்று விளக்கம் தர முன்வந்திருக்கிறார். ஹிந்து மதப் பித்தன் நானல்ல, ஹிந்தி வெறியனும் நானல்ல, என்று அவசர அவசரமாக விளக்கம் தருகிறார், கிட்டத்தட்ட ஓராண்டு காங்கிரஸ் தலைவராயிருந்து பதவியைவிட்டு விலக வேண்டிய அவசியம் ஏற்பட்டபின்.

ஹிந்து மதத்தின் காவலன், சமஸ்கிருத கலாச்சாரத்தின் முன்னணி வீரன், என்று, அவர் காட்டிய பட்டயங்கள்தான் அன்று அவரைக் காங்கிரஸ் ராஷ்டிரபதியாக்கின, என்பது நாடறிந்த உண்மை. இந்த யோக்கியதாம்சங்களை வற்புறுத்தித்தான் அன்று அவரை ஆதரித்த எல்லாப் பத்திரிகைகளும் எழுதின. விளக்கம் தரவேண்டும், மறுக்க வேண்டும், என்ற எண்ணம் அன்று தாண்டனுக்கு எழவேயில்லை. இந்தபத்திரிகைப்பிரச்சாரம் தன்னைத் தவறாகக் காட்டுவதற்காக தனது எதிரிகளால் தூண்டப் பட்டதென்று இன்று கண்ணீர் வடிக்கிறார் ராஜரிஷி!

இப்படி அருமை நகரமான அலஹாபாத்தில் தாண்டன் பேசியிருக்கிறார். இப்பேச்சில் அவர் முன்னுக்குப்பின் முரணாக உளறிக் கொட்டியிருக்கிறார் என்பது ஒருபுறமிருக்கட்டும். அவர் இவ்வாறு பேசவேண்டிய காரணங்கள் என்ன?

ஒரே ஒரு காரணத்தை மட்டும் கவனிக்கலாம். ஆங்கிலோ—இந்திய சமூகத்தின் தலைவர் பிராங்க் ஆந்தோணிதரும் தகவல்களிலிருந்து, விளக்கம் தரவேண்டிய அவசியம் தாண்டனுக்கு ஏன் ஏற்பட்டதென்பது ஒருவாறு வெளிவருகிறது.

ஆங்கிலோ-இந்திய சிறுபான்மை வகுப்பினரின் தாய்மொழி ஆங்கிலம்.

“ஆங்கிலோஇந்திய பள்ளிக்கூடங்களை அழித்துவிடும் முறையில்,
உத்தரப் பிரதேசத்திலு
தியப் பிரதேசத்திலும், கா
மந்திரி சபைகள் நடந்து
கின்றன. இதைத் தடுக்கா
நாட்டின் மற்றப் பகுதிகளிலு
வகுப்புவாத பிற்போக்கு ம
பான்மை பரவிவிடும். உத்தர
தேசத்திலும், மத்தியப் பி
திலும், தாய் மொழியில் பாட
கற்கக் கூடாது, என எ
குழந்தைகளைக் கட்டாயப்
கிறார்கள். எங்கள் தாய்
மீதுள்ள அவேஷத்தினா
வாறு செய்கிறார்கள். எங்க
குள்ள சஞ்சலத்தையும் க
தையும் எடுத்துச் சொல்லி,
வர்களைப் போல எங்களுக்கு
உரிமை வேண்டுமென்று கேட்
நாங்கள் வகுப்புவாதிகளென
கள் கூச்சலிடுகிறார்கள். எ
சமூகத்தினரின் கல்வி சம்ப
அரசியல் சட்டத்தில் எங்க
அளிக்கப்பட்டிருக்கும் உ
மொழியை உடைத்தெறி
அவர்கள் முனைந்துள்ளனர்.”

மேலே தந்திருப்பது, பி
அந்தோணியின் குற்றச்சாட்
ஒரு பகுதியேயாகும். முக்கிய
உத்தரப் பிரதேசத்தின் கா
ஆட்சியாளர் செய்து வரும்
யாயமான, சட்டத்திற்குப்
பான, மொழிவெறிச் செய்கை
பற்றி, அவர் இன்னும் விரி
பேசியிருப்பதுடன், வன்மை
யும் கண்டித்திருக்கிறார்.

தாண்டன், தான் மொழி வெ
னல்ல என்று கூறுவது உ
யானால், ஆங்கிலோ இந்தியக்
தைகள் தங்கள் தாய்மொழி
பாடங்களைப் படிக்கவிட
இடைஞ்சல் ஏற்படுத்துவ
காரணமென்ன? ஹிந்தி வெ
னல்ல என்று கூறும் தாண்
தனது ராஜ்யத்திலேயே, ஒரு
பான்மை வகுப்பினரின்
மொழியை ஒழித்துக்கட்ட, வெ
படையாகச் செய்யப்பட்டு
முயற்சியைக் கண்டிக்காத
இன்று உத்தரப் பிரதேசம்,
தியப் பிரதேசம், இவற்றில்
உற்சவத்திற்குத் துவ
ரோஹணம்! அடுத்தபடி எங்கே
பகுதிகளில்?

★

★ விஷ(ய) வியாபாரிகள்! ★

டிமையாகப் பிற! அடிமையாக
! உனக்குப் பெருமையுண்டா
!

யாசர் விருந்து இது! கண்ணன்
ட்டிடும் வழி இது!

யார் இந்த விசித்திர வேதாந்த
தனை செய்கிறார் என்பீர்கள்!

கலர்க் கண்ணாடியினால். கருத்து
த்திரிந்த நிறத்தில் பார்த்து,
த்துவிட்டு வேடிக்கை பார்த்
பவர்! சாணக்கியரின் மறு
ப்பு! குல்லூகபட்டர் என எல்
லாரும் சொல்லிடும் வகையிலே
ப்பவர்! தென்னாட்டு "ஜி" வட
ட்டுக்கு "சி"—அவர்தான் நமது
ச்சாரியார்!

யாருக்கு இந்த பொன்மொழியை
வர் உதிர்த்தார் என்று கேட்கத்
டிப்பீர்கள். உங்கள் கேள்வி
க்குமுன், தெரிந்து கொள்ளுங்
! உங்கள் அவசரம் எல்லை
க்குமுன் விளக்கந்தரப்படுகிறது.
கட்டு, மயங்கி கீழே விழுந்துவிடா
ர்கள்!

சுதந்திர மாளிகையமைத்து,
தில் வீற்றிருக்கும் சுந்திர புருடர்
ருவர் இப்படி, வேதாந்தம் பேசு
றா என்று ஆச்சர்யமாகத்தானி
க்கும்:

அதைவிட ஆச்சரியம், அவர்
தாரண சத்கதா காலட்சேபம்
பவரல்ல — உள்நாட்டு மந்திரி
வர்!

அவர், ஏதோ, எங்கேயோ, இப்
டி எதற்காகவோ கூறிவிட்டார்
ன்று எண்ணவேண்டாம்.

* * *

சன்மார்க்க போதனையோடு நின்
ருந்தால், சங்கடமில்லையே! சட்ட
ல்லவா இயற்றுகிறார் அவர்! அந்த
ட்டத்தின் குரல், இத்தகைய சன்
லக் குரலாக இருப்பதால்தான்
ம் வருந்துகிறோம்.

போதனையைப் பார்த்தால்,
வதனையாகவல்லவா இருக்கிறது!
அந்தப் போதனையும் சாதாரண
ளி கட்டியின் வாய்வழியோடு நிற்
தல்ல, சட்டம். அதனை மக்கள்
ஏற்று நடத்தவேண்டும் என்றெண்
ணும்போது, பெரிய சோதனை
யாகத் தோன்றுகிறது!

அவர், கொண்டுவந்த சட்டம்,
இப்படி யாரை நோக்கிக் கூறுகிறது
தெரியுமா? இப்பொழுது தெரிந்து
கொள்ளுங்கள்.

* * *

பத்திரிகைகள், இந்த பொன்னை
கருத்தை ஏற்று நடத்தவேண்டும்.

அதற்காக சட்டமியற்றிட
முபன்ற நேரத்தில், அவர் அளித்த
அறிவுரையிலே, நமக்குப் புலப்படு
வது இதுதான்!

இப்படி, வெளிப்படையாகக் கூற
வில்லை அவர், ஆனால் அவர் பேச்சின்
உள் கர்த்தம் இதுதான். ஒவ்
வொரு வார்த்தையின் இடையிலும்
உள்ள சூது சுரங்கத்தைத் திறந்
தால் தெரியும்!

மக்கள். மனதை விஷமாக்கிவிடு
கின்றனவாம் புவை. அதற்காக
அவர் தடுப்பு வேலை செய்கிறாராம்.

பத்திரிகைகள் விஷ வியாபாரி
கள். இந்த ஆளவந்த குண சீலர்கள்
அமுத வாணிபர்கள் போலும்!

விஷ வியாபாரிகளைத் தடுக்க, ஒரு
சட்டம்! அதற்கு, அவர் சப்பை
கட்டு கட்டுகிறார்!

எந்த நாட்டு சரித்திரத்திலும்
கண்டிருக்க முடியாது! இங்கே பத்
திரிகைகள் விஷ வியாபாரிகள்,
அவைகள் கைதிகளைப் போலவே
நடத்தப்படவேண்டும் என்று சட்
டம் செய்ததில்லை! ஆனால் சுதந்திர
பாரதத்தில், சுதந்திரவீரர்கள் ஆட்சி
யிலே காண்கிறோம்.

* * *

பத்திரிகைகள், இவர்களின் பித்த
லாட்ட பேரிகையாக இருக்கும்
பொழுது எப்படி வாழ்த்தினார்கள்
என்பதை நாம் மறக்கவில்லை.

7-ம் பக்கம் பார்க்க

வாழ்க, மணமக்கள்!

சென்ற வாரத்தில், சென்னையில் வாழ்வின் துணைவர்களாக இணைந்த
மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்)—சுந்தராம்மாள்

திராவிடநாடு

ஞாயிறு] 30—9—51 [காஞ்சி

முட்கள்

பார்லிமெண்ட் உறுப்பினர் முத்கல் உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குவதாகத் தீர்மானிக்கப் பட்டது.

அவர், தமக்குள்ள பதவியின் மூலம், சொந்த லாபத்திற்காக பல சமூக துரோகங்களில் ஈடுபட்டார்.

தனிப்பட்ட சிருடைய நலத்திற்காக, தன் பதவியைப் பயன்படுத்தினர்.

அதற்காக லஞ்சமும் வாங்கினர்.

பம்பாய் தங்கம், வெள்ளி வர்த்தக சங்கத்திற்கு கொள்ளைலாபம் தேடித்தர கூலி வாங்கினர்.

தனிப்பிரசுரம் ஒன்று வைத்துக்கொண்டு, விளம்பரம் செய்வதாகச் சொல்லி தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து பணம் வாங்கினர்.

அமெரிக்கா விளம்பர இலாகாவிலிருந்தும் கைக்கூலி பெற்றார்.

இப்படிப் புகார்கள் வந்தனவாம் அவர்மீது. அதற்காகத் தனிக் கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது. அதன் விசாரணை செய்யப்பட்டு அளிக்கப்பட்ட முடிவுதான், இந்தத் தீர்மானத்திற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

முத்கல் பார்லிமெண்ட் மெம்பர். அவர் தம் பதவியை பாதக வேலைகளுக்குப் பயன்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

அது புகாராக உருவெடுத்த போது, கமிட்டி நியமிக்கப்பட்டது.

கமிட்டி, இன்று புகார் உண்மையானது என்று அறிவிக்கவே, முத்கல் வெளியேற்றப்பட்டார்.

இந்த தீர்மானம் வருமுன்பே, முத்கல் தம் பதவியை ராஜினமா செய்துவிட்டார்.

முத்கல் மும்முரம், ஒரு கண்துடைப்பு! வெறும் வெளிவேஷம் என்பது, கூர்ந்து சிந்திப்போருக்குத் தெரியும்.

பார்லிமெண்ட் மெம்பர்களில், முத்கல்கள் ஏராளம்.

அப்படிக் கூறுவதைவிட, முத்கல்கள் கூடிமிடமே, இன்றைய பார்லிமெண்ட் என்றால் மிகப் பொருந்தும்.

முத்கல்கள் நிறைந்த இடத்திலே இந்த முத்கல் வேண்டுமானால் தன்னைப் பிறர் கண்டு கொள்ளாத முறையில நடக்கும் திறமில்லாத முத்கலாக இருக்கலாம்.

இந்த முத்கலைவிட, திறமை மிக்கவர்கள் மற்ற முத்கல்கள்!

முத்கல்களை வெளியேற்றுவதென்றால், பார்லிமெண்ட் காலியாகிறது என்று அர்த்தம்.

பார்லிமெண்ட், முத்கல்களின் ஓய்வு நேரச் சாவடி, இன்று.

மந்திரி பீடத்தில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் மட்டுமல்ல!

உறுப்பினர் உடையிலே முத்கல்கள்! மந்திரிகள் உடைகளுக்குள்ளேயும் முத்கல்கள் இருக்கிறார்களே!

அவர்களையும் வெளியேற்ற வேண்டுமே! முடியுமா?

ராஜ்ய சர்க்கார்களில் உள்ள சட்டசபை உறுப்பினர்களில் எத்தனை பேர் முத்கலாகாமலிருக்கிறார்கள்? ஒவ்வொரு எம். எல். ஏ. வும் எந்த வட்டாரத்திற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டார்களோ, அந்த வட்டாரத்தைப் பார்த்தால் தெரியும்.

சென்னையை எடுத்துக்கொண்டால், மந்திரிகளாக முத்கல்கள் உலவுகிறார்கள் என்று, சாதாரணமானவர் கூறவில்லை. மாஜிபிரதமர் பிரகாசம் குற்றம் சாட்டினர்.

பிரகாசம், ஒரு முத்கல் என்றார்களே தவிர, தாங்கள் முத்கல்கள் அல்ல என்று கூறவில்லை.

முத்கல்களின் முகாமாக காங்கிரஸ் ஆகிவிட்ட பிறகு, ஒரு முத்கலை ஓட்டுவதால் பயன் என்ன? அது தான் கண்துடைப்பு வேலை யென்கிறோம்.

எரிகிற கொள்ளியில், எந்த கொள்ளி நல்ல கொள்ளி என்பார்கள். அதுபோல் முத்கல் மலிந்து விட்ட பிறகு ஒரு முத்கலை வெளியேற்றுகிறார்களாம்.

இதற்குக் காரணம் இருக்கத்... செய்கிறது! ஆனல் மக்கள் இ... அவ்வளவு கண்மூடிகளாக இ...

நேருவின் அதிர்ச்சி வை... யங்களில், இதுவுமொன்று எ... காட்டி, முத்கல் போய்விட்ட... புனிதமடைந்துவிட்டது காங்கி... புகழ் வந்துவிட்டது காங்கி... ஆட்சிக்கு என்று நாப்... கொட்டி, நாட்டுமக்களின் ஓட்டு... வேட்டையாடும் உத்தகு... களுக்கு இது தீனியாகலாம். ஆ... நாட்டோர் இவைகளை நம்பும் கா... ஓடி பல காலமாகிவிட்டன.

சப்பாத்திக் காட்டிலிருந்து மு... களை வெளியேற்ற முடியுமா?

காங்கிரசும் இன்று சப்பாத்... காடுதான். முத்கல்களை வெ... யேற்றுவதென்பது, முட்... வேட்டையாடுவது போலத்தா...

முட்களை ஒழித்துவிட்டு, சப்... திக்காட்டை சந்தனக் காடாக்... தாகப் பேசினல், சிந்தை கல... யோர்கூட சிரிப்பார்கள். ஒத்... கொள்ளமாட்டார்கள்.

ஆனல் முத்கல் மும்முரம் கா... வாயைமூடப் பார்க்கிறார்கள்.

தாண்டன் இருந்த தால் தா... கேடுகள் இருந்தன.

அவர் போனர்! நேருவே த... ராஞர்! புதியகமிட்டி நியமித்... இனி, ஆட்சி சிறக்கும்! க... செழிக்கும்!

இப்படி பேசிடும்போக்கு மக்... டம் நிலவிடச் செய்யவே, முத்... ஏற்பாடு மும்முரமாக செய்யப்... டுள்ளது.

அதற்கு அதிக விளம்பரமு... பரபரப்பும் அளிக்கப்பட்டு... கிறது!

முட்கள்போய், சப்பாத்தி க... னக்காடாகலாம்! ஆனல் முத்கல்... போய், காங்கிரஸ், நிலைக்கமுடியா...

*

திருச்சியில்
9—10—51
செவ்வாய் இரவு
மு. கருணநிதியின்
வாழ முடியாதவர்கள்
நாடகம்.
தி. மு. க. நிதிக்காக.

5-ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களின் வீட்டு வெறிநாய் களைப்போல, தட்டி விட்டபக்கம் குலைத்தபோதெல்லாம், அதற்கு எவ்வளவு பாராட்டுதல்களை அள்ளிக் குவித்தார்கள்.

பத்திரிகைகள் கொஞ்சம் நேர்மையைக் கடைப்பிடிக்கிறது என்றவுடன் சட்டம் செய்கிறார்கள்!

பத்திரிகைகள் என்ற பெயரில் பசப்புக்காரத் தப்பட்டைகள் பவனி வருவதை நாம் பார்க்கிறோம்.

சில, காசைக் கணக்குபோட்டு, எழுத்தை அள்ளித் தெளிக்கும் அலங்கோலங்கள் நமக்குத் தெரியும்.

எழுத்திலே, நரகல் நாற்றமடிக்கும், ஓதுக்கிட ஒய்யாரங்கள் இன்னமும் நடமாடுகின்றன.

கூட்டுக்கோல்போல, குப்பைகளைத்திரட்டிவைக்கும் குப்பைத் தொட்டிகள் உண்டு.

ஆனல் அவைகளைப்பற்றி வாய சைக்காத வக்கிரங்கள், எழுத்து சுதந்திரத்திற்கே, குழி தோண்டுவதைக்காண சகிக்கவில்லை.

* * *

மக்கள் மனதிலே விஷத்தை தூவுகின்றனவாம்.

இவர்கள் என்ன தூவுகிறார்களாம்!

இவர்கள் மனதில் தூவுகிறதிருக்கட்டும்! வயிற்றிலே புளியங்கொட்டையும், பருத்திக்கொட்டையும் கொட்டினார்களே! இவைகளை எடுத்துச் சொன்னது விஷத்தைத் தூவுவது என்று கூறமுடியுமா?

வயிற்றில்தான்புளியங்கொட்டை கண்களில், வழியவிட்டது, சாதாரண கண்ணீரா? செங்குருதி! இந்தக்குருதியைக்காட்டி, கேட்டதும் விஷ வியாபாரந்தானா?

உடலில், மானத்தை மறைக்க, துணியும் தராதுவிட்டனரே! அதனைச்சுட்டிக் காட்டியதும் அப்படித்தானா?

ஆட்சியாளர்களின் அலங்கோலங்களை அன்றாடம், அம்பலப்படுத்தின! இவர்களைக் கேலி பேசவேண்டும் என்பதற்காக! ஆனல் அவைகளை விஷவியாபாரிகள் என்று குற்றஞ்சாட்டி, வாய்ப்பூட்டுச் சட்டம் தீட்டுகிறார் அவர்.

ஆனல், உண்மையில் பத்திரிகைகள் அப்படியா? விஷத்தையா விற்பனை செய்கின்றன! இல்லை, இல்லை! விளங்காததை விளங்க வைத்திடும் வித்தை செய்கின்றன. வீட்டுத் தொழுவத்தில் கிடப்பவைகளைக் கூட, விளம்பரத்தினல் வானிலே பறக்கவிடுகின்றன.

தர்ப்பையும் கையுமாய், குளத்தடிக்குப்பண்ணைக்களாக இருப்பவர்களை சட்டசபைகளில் வீற்றிருக்கச்செய்திருக்கின்றன.

பஞ்சாங்கம் புரட்டிகளை, பாராள வைத்திருக்கின்றன.

பகல் வேடக்காரர்களைக்கூட, பக்குவம்பெறச் செய்துள்ளன.

ஆகவே, பத்திரிகைகள் விஷ வியாபாரிகள் அல்ல! விஷ (ய) வியாபாரிகள்!

பயன்படுத்துவோரைப் பொறுத்திருக்கிறது பலன்—எடுத்து நடத்துவோரின் திறமையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது, அதன்பின் விளைவு!

இந்த உண்மையை உணராதவரல்ல, அவர்! ஆனலும் சட்டமியற்றியுள்ளார்!

* * *

உலகிலே இல்லாத கொடுமை இது என்பீர்கள்.

அவரோ, அதற்கு அருமையான பதில் சொல்லிவிட்டார்! நீங்கள் என்ன செய்வீர்கள்?

நாம் மேல்நாட்டாருமல்ல, கீழ்நாட்டாருமல்ல, நமக்கு, அவர்களின் சட்டதிட்டங்கள் ஒத்து வருமா? கேட்டுவிட்டார் குல்லூகபட்டர்.

அத்தோடு விட்டாரா? மேலும் சொல்லியுள்ளார்.

நமக்கு சாதி, மதப்பிரிவுகளில் அதிக அழுத்தமான நம்பிக்கையிருக்கிறது, ஆகவே,இவைகளுக்கு விரோதமாக எழுதினல்என்னவது? மேல்நாட்டாரின் சட்டம் இதற்கு ஒத்துவருமோ?

சாதியையும், மதத்தையும் காப்பாற்ற வேண்டும், அதற்காக பத்திரிகை சுதந்திரத்திற்கு சவக்குழி வேண்டும்! ஆச்சாரியார் அறிவுரை இது!

நம் மக்கள் ஏழைகள். அவர்களிடம், ஏழ்மையை, பயங்கரமாக விளக்கி, விபரீத பாதைகளில் இறங்கிவிடத் தூண்டுகின்றன பத்திரிகைகள். ஆகவே, அவைகளைத் தடுக்கவேண்டும். இதுவும் ஆச்சாரியார் செய்யும் இதோபதேசம்.

ஏழ்மையைப் போக்க, வழி காணத் தெரியவில்லை.

ஏழை யென்றும், பணக்காரனென்றும் எவனுமில்லை சமூகத்தில்! மேடையதிர பாடினர்கள்.

இல்லையென்ற சொல் இனியில்லையென்று கொட்டு முரசே என்று கூறினர்கள்.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று பேசினர்கள்.

ஆனல், இன்று ஏழைகளை வாழ்விக்க! பத்திரிகைகளின் வாயை மூட முயற்சி செய்கிறார் ஆச்சாரியார்.

மக்களிடம் பரவியுள்ள மடமையை எடை போட முடியாது.

இதுவும், அவர் கண்டுபிடித்த புதுமைதான்!

ஆனல் அந்த அறியாமை இருட்டை, விரட்டும் விளக்குகள் தான் பத்திரிகைகள் என்பதை உணர மறுக்கிறார். விளக்கை அவிக்கிறார். ஆனல் இருட்டை விரட்டுகிறேன் என்று வேறு பேசுகிறார்.

இருட்டைப் போக்க, அவர் காணும் புதுமுறை இது!

முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும்! வைரத்தை வைரத்தாலே அறுக்கவேண்டும்என்பதைப் போல, இருட்டை இருட்டாலேயே போக்கவேண்டும் என்று எண்ணி விட்டார் போலும்!

* * *

ஆச்சாரியாரின் அற்புத மொழிகளைக் கேட்டு, ஆனந்த சாகரத்தி லாழ்ந்திருப்போர், இப்பொழுது, மிக கவனமாகக் கேட்கவேண்டும்.

144 தடையுத்தரவு, செய்த தொண்டைப் போல, வேறு எதுவும் இந்த நாட்டின் அமைதி காக்கப் பயன்படவில்லை.

144 தொண்டு புரிந்திருக்கிறது. அதைக் கண்டு பூரிக்கிறார் கலர்க் கண்ணாடி சீலர்!

நாட்டின் அமைதியைப் பாதுகாக்க, தடையுத்தரவு தொண்டு செய்துள்ளதாம்.

வெட்கம் துளியுமின்றி, வெளியில் சொல்கிறார்!

ஆனால், மக்களிடம் அமைதி காண 144 நல்ல தொண்டு செய்திருக்கிறது என்று பாராட்டுகிறார்.

மக்களை அவர் நம்பவில்லை!

மகாத்மாவின் தொண்டைக் கூட மகத்தானது என்று எண்ணவில்லை!

அவர்களின் தியாகம் கூடப் பெரிதாகத் தெரியவில்லை!

144, தடையின் மீது நம்பிக்கை வைக்கிறோம்.

அதுதான் அமைதியை நிலை நாட்டிற்றாம்!

தடைச் சட்டம், பல தடைகளை மீறி, சுதந்திரம் வாங்கியவர் ஆட்சியிலே, பாராட்டு பெறுகிறது.

நடியடி, இன்றைய ஆட்சியாளரின் தோழன்.

சிறை, இன்றைய ஆட்சியில் நாளும் பெருகும் கலைக்கூடமாகி விட்டது.

இதையும், அவர் சொல்லியிருக்கிறார் என்பதை எண்ணும் பொழுது, அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை!

* * *

அவர்களுக்கு அந்தியகாலம் வந்து விட்டது. முடிதுறப்பு நெருங்க, நெருங்க இப்படி சட்டமியற்றுகிறார்கள்.

அடுத்து வரும் தேர்தலில், அவர்கள் ஊழல்கள் வெளியாகாமல்தடுக்க இப்பொழுதே ஆயத்தம் செய்கிறார்கள்.

பத்திரிகைகளை விஷவியாபாரிகள் என்று குற்றஞ்சாட்டி, இந்த ஆட்சியிலே அமர்ந்திருக்கும் உண்மை விஷவியாபாரிகள்ஒளிந்துகொள்ளப் பார்க்கிறார்கள்!

இந்த ஆட்சியிலே உள்ள விஷவியாபாரிகள், விஷமதாகப் பேசுகிறார்கள்! விபரீத பேரம் நடத்துகிறார்கள்! இதனை நாடு தாங்காது—நல்லவர்கள் ஏற்கமாட்டார்கள்!

வெறி, வெற்றி பெற்றுவிட்டது!

—✲✲—

இந்து சட்டத் திருத்த மசோதா மிக மிக அவசியம் என, நல்லோர் கூறினர்.

பெண்ணுரிமை வழங்கும் அம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென அம்பேத்கார் துடியாய்த் துடித்தார்.

பார்லிமெண்ட் உறுப்பினரில் பலரும், மசோதாவை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்றனர்.

இந்திய பெண்மணிகள் மாநாடுகள் மூலம் அம்மசோதாவுக்குத் தங்கள் ஆதரவைத் தந்தனர்.

முற்போக்குப் பத்திரிகைகள் எல்லாம், மசோதாவுக்கு வரவேற்பு அளித்தன; ஆதரித்து எழுதின.

இந்து மதத்தில் உள்ள சீர்கேடுகள் சிலதை ஒழிக்கும் அரசியல் சீர்திருத்தமென்றே, பலர் கூறினர்.

சென்னையில் திராவிட பெண்கள் முன்னேற்றக் கழக மாநாடு கூடி, இதற்கு ஆதரவு தந்தனர்.

பலமுறை காங்கிரஸ் சட்டசபை கட்சிக் கூட்டத்தில் இம்மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென பல தலைவர்கள் வலியுறுத்தினர்.

பண்டிதநேரு, "இம்மசோதாவை மக்கள் ஆதரிக்கவில்லையென்றால், என்னை ஆதரிக்கவில்லையென்றே பொருள்; சட்ட சபை உறுப்பினர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் என்னை எதிர்ப்பதாகவே அர்த்தம்" என்று, முழக்கமிட்டார்—பல தடவைகள்.

"இம்மசோதா நிறைவேற்றப்படாவிடில் நான் எனதுபதவியைவிட்டு ராஜினாமா செய்வேன்" என்று ஆவேசத்தோடு, சட்ட சபையில் சங்கநாதம் செய்தார்.

ஆனால்

வைதிகம், வாகை சூடிவிட்டது. மேற்படி மசோதா சட்டமாகாமற் செய்துவிட்டது.

சனாதனிகளின் உண்ணாவிரதப் பூச்சாண்டி, சட்ட சபைக்கு முன்னே நடத்திய ஆர்ப்பாட்ட அலங்கோலம், பிற்போக்கு வாதிகளைக் கொண்டு எழுப்பிய கூச்சல்—வெற்றி கண்டு விட்டது.

மாபெரும் தலைவர்கள் ஒரே மூச்சோடு இருந்தனர்; ஆனால் மதப் பித்து அவர்கள் முயற்சியை மண்டியிடச் செய்துவிட்டது.

வைதீகவெறி—மதச் சீர்திருத்தம் கூடாதென்று கூவி, பண பிம்பங்களின் பக்கபலத்தோடு. மசோதாவை முறியடித்துவிட்டது.

பண்டித நேரு பதறவில்லை!

பழைமை சிரிக்கிறது!!

சீர்திருத்தம் பலிக்கவில்லை!

வைதிக வெறி, குதூகலமடைகிறது!!

மசோதாவைக் கொணர்ந்தோர், மாபெருந் தலைவர்கள். ஆனால், அவர்களை மண்டியிடச் செய்துவிட்டது வைதீகம்! மசோதா நிறைவேற மக்கள் ஆதரவு தந்தனர்; ஆனால் மதவெறி வீழ்த்திவிட்டது!!

★ இலட்சியப் பாதை ★

—✕✻✕—

திராவிட முன்னேற்றக் கழகம்—இந்தப் பெயரைக் கேட்டதும், நாடாள வந்த நம்மை சர்க்காருக்கு கிலி—நாட்டின் விடுதலைக்காக உழைத்த நல்லோர் முகாமிலே, இன்று மலிந்துள்ள பல நயவஞ்சகர்களுக்கு நடுக்கம் — முதலாளித்துவத்துக்கு முணு முணுப்பு — வைதீக வெறியர்களின் ஒப்பாரி—அடக்குமுறையின் கொடுமை ஆகியவைகள் தாண்டவமாடுகின்றன. ஆனால் நூற்றுக்கு 95 சதவிகிதமுள்ள, ஏழை பாட்டாளி மக்கள் — நடுத்தர வகுப்பினர் — குறிப்பாக இளைஞர் உலகம், திராவிட முன்னேற்றக் கழகம் — என்றால், தங்களுக்கும், நாட்டின் நல்வாழ்வுக்கும் வழிவகை செய்யப் பணியாற்றிவரும் அறிவுடைமை கொண்ட இயக்கம்—என்றே தீர்ப்பு கூறிவருகின்றனர்.

நூற்றுக்கு ஐந்து சதவிகிதமுள்ளவர்கள் பட்டியல்தானே! இதனால் கழகத்தையோ — அதன் கொள்கை கோட்பாடுகளையோ அசைத்துவிட முடியுமா? என்று சிலர் கருதலாம். முடியாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாண்டு நிகழ்ச்சிகளில் நாட்டினர் அறிந்ததேயாகும். எனினும் 5 சதவிகிதமுள்ள பிற்போக்கு சக்தியானது, அரசியல் ஆதிக்கக்காரர்கள்—சமுதாய பேதாபேதங்களைத் தங்களது சுயநல வாழ்வுக்குப் பயன் படுத்திவரும் ஜாதிமத வெறியர்களின் துணை கொண்டு, நாட்டிலே நற்பணியாற்றி வரும் முற்போக்கு சக்திகளுக்கெல்லாம் இலக்காகி, பலவித தொல்லைகளையும் சகித்துக்கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகம் தனது இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்து, மூன்றாவது ஆண்டுப் பருவத்தில், மேலும் தனது இலட்சியப் பாதையில் பீடு நடையுடன் முன்னேறிச் செல்லுகிறது—இன்று.

திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஜனநாயகம், கொள்கையில் தளரா உறுதி, பூஜா உணர்ச்சியற்ற தன் மானத் தொண்டு, ஆகியவைகளை அரணாகக் கொண்டு கடந்த இரண்டாண்டாக பணி புரிந்து வந்திருக்கிறது. மேலும் பணி புரியவும் ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டக் குழுவினரும், தங்கள் மாவட்டங்களில் நடைபெற்ற மாவட்ட மாநாடுகளுக்குப் பிறகு கிளைக் கழகங்களைத் தழைக்கச் செய்வதில் சென்ற ஆண்டு மிக மிக அக்கரை காட்டியுள்ளனர். முதல் ஆண்டு நிறைவின் போது மாநிலம் முழுமைக்கும் 518 கிளைக் கழகங்களே தழைத்திருந்தன. முடிவில் இரண்டாவது ஆண்டு நிறைவு நாளாகிய இந்நாள் 675 கிளைக் கழகங்கள், பாசறைகள் நிறுவப்பட்டுள்ளன.

கிளைக் கழகத்தினரும்—மாவட்டக்கழகத்தினரும், யாதொரு விஷயங்களையும் ஜனநாயக முறையில் தங்கள் தங்கள் கமிட்டியின் மூலமே

என். வி. நடராசன்
[அமைப்புக்குழுச் செயலாளர்.]

நிறைவேற்றும் பண்பு நம் கழகத்திலே சென்ற ஆண்டைவிட மேலும் செம்மையாக வளர்ந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது இரண்டாவது ஆண்டில் ஆற்றியுள்ள தீவிரப் பணியில்அரசியலாரின் அடக்குமுறை வெறியாட்டத்திற்கு இலக்கான நேரங்களிலெல்லாம், அகிம்சா மூர்த்திகள் என்று தங்களைப் பெயரளவில் விளம்பரப்படுத்திக் கொண்டுள்ள காங்கிரஸ் தோழர்கள் வெட்கித் தலை குனியும் வண்ணம், தி. மு. க. தோழர்கள் அமைதியையும்—அதே சமயத்தில் இலட்சியத்தில் ஆர்வமும் காட்டியதானது, ஒவ்வொரு கிளைக்கழகநிர்வாகிகளும் கழகத்தை அமைத்துள்ள அஸ்திவாரப்பண்பே யாகும் என்றால் அது மிகையாகாது. இவ்வுண்மையை நமது அரசியலாரும் அறிவர்.

பொதுவாக எல்லா கிளைக் கழகத்தினரும்—மாவட்டக் குழுவினரும் அமைப்புக் குழு வேலைத் திட்டங்களில் கூடுமான அளவு ஆர்வங் காட்டி ஒத்துழைத்து வருகிற ஸ்தாபன ரீதியாக வளரும் இலட்சியப் பாதையில் நமது கழகம் முன்னேறிச் செல்லுகிறது என்ற நிலையை நாம் பூரிப்புடன் காண்கிறோம் என்பதை மட்டும் யாரும் மறுத்துவிட முடியாத உண்மை.

நமது அமைப்பு முறை வலுவாகி வருவதைக் கண்டே வடநாட்டு ஏகாதிபத்தியமும் அதற்கு அடிமைப் பட்டுள்ள சர்க்காரும் சில நேரங்களில் நடுங்குகின்றனவென்றால், கழக அமைப்பு முறை மேலும் தீவிரமாக கடைபிடிக்கப்பட்டால், ஆட்சிப் பீடத்தின் சர்வாதிகாரம் என்ன பாடு படும் என்பதை கிளைக் கழகத்தினர் அனைவரும் சற்று சிந்தித்துப் பார்த்து, மேலால் அத்துறையில் கவனம் காட்ட வேண்டும்.

நாமோ—நமது கழகமோ தேர்தல் காலத்து காளான்களல்ல — நமது இலட்சியம் திராவிடத் தனியரசு நிறுவுவதேயாகும். எனவே அதற்கு அஸ்திவாரமான அமைப்பு முறைப் பணியில் முக்கிய ஊக்கங் காட்டுமாறு கிளைக் கழகத்தினர்—மாவட்டக் குழுவினர் ஆகியோரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

நமது பொதுச் செயலாளர் அவர்கள் கழகத்தின் சார்பிலே நமக்கிட்டுள்ள கட்டளை ஒரு இலட்சம் உறுப்பினர்களைச் சேர்த்துத் தரவேண்டுமென்பது. இப்பொழுது இந்த ஆண்டு நிறைவில் சுமார் 60 ஆயிரம் உறுப்பினர்கள் வரைதான் சேர்க்க முடிந்தது.

நாம் தளராது பணியாற்றினால் முடியாது எதுவுமில்லை. முயன்று தொண்டாற்றினால், ஒரு லட்சம் உறுப்பினர்கள் சேர்த்துவிட முடியும்.

எனவே வரும் மூன்றாவது ஆண்டில் பொதுச் செயலாளரின் வேண்டுகோளை—கட்டுக்கோப்பான முறையில் நிறைவேற்றி தொடர்ந்து இலட்சியப் பாதையிலே முன்னேறிச்சென்று இன்பத் திராவிடத்தை நிறுவுவோமாக!

—✱—

கேரளத் தென்றல்

[கி. மனோகரன்]

மலையாளப் பகுதியிலே நாம் காலூன்ற முடியுமா! என்ற ஏக்கம் நிறைந்த கேள்வி — அதற்குக் கிடைத்த சோகம் கப்பிய விடை.... நெருக்கடியான இந்தக் கட்டத்தை இன்று நாம் தாண்டிவிட்டோம். முடியுமா? என்ற சந்தேக வினாவிலேதான் நாம் நமது பயணத்தை ஆரம்பித்தோம். முடியாதே என்ற ஆச்சரியக் குறிகளை பாதையோரங்களிலே பல நேரங்களிலே சந்திக்க வேண்டியவர்களானோம். முடியவே முடியாது போலிருக்கிறதே என்ற திடமான முடிவு நோக்கிக்கூட சில சந்தர்ப்பங்களில் நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

நமது கருத்தை அவர்கள் எங்கே ஆதரிக்கப் போகிறார்கள். கழகத் தோழர்களிலேயே பலருடைய உள்ளங்கள் நினைத்தன இப்படி. ஆனால் மலையாளப் பகுதி நமது கட்சியின் இலட்சிய விதைக்கேற்ற மண், விளைநிலம் என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள நீண்ட நாட்கள் பிடிக்கவில்லை.

மலையாளப் பகுதிக்கே ஓர் புதிய இயக்கம்—அவர்கள் அறியாத கட்சி—அறியும் சூழ்நிலையும் நாம் ஏற்படுத்தவில்லை இதற்கு முன், இந்நிலையில் திடீரென்று ஒரு நாள் மலையாளப் பகுதியின் அரசியல் மேடையிலே நின்றுகொண்டு, நமது இலட்சியங்களைப் பற்றிக் கூற ஆரம்பித்தால்! ஆம் அப்படியே ஓர் நாள் ஆரம்பித்தோம். ஆச்சரியத்தால்! அவர்கள் கண்கள் அகல விரிந்தன. தொடர்ந்து அலட்சியப் புன்னகையையும் தூவிவிட்டார்கள். அத்தோடு நாம் நமது முயற்சியைத் தளரவிட்டிருந்தால்......?

அவர்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி பற்றித் தெரியும், கேரளர் சோஷியலிஸ்ட் கட்சியை அறிவார்கள், காங்கிரஸ் இயக்கம்தெரியும், ரவலூஷனரி சோஷியலிஸ்ட் கட்சியை உணர்வார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் புரியாது. புரியாதென்றால், உதாசீனத்தின் விளைவு என்றல்ல பொருள். புரிய முடியாத சூழ்நிலையில் சிக்கியிருந்தார்கள். ஏனைய அரசியல் கட்சிகள் அவர்கள் மத்தியிலே சென்றார்கள். நாம் செல்லவில்லை. நாம் செல்லவில்லை; எனவே நம்மைப்பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்து இன்று இங்கே ஆண்டுகள் ஏறத்தாழ இரண்டாகின்றன. ஆரம்பித்தபோது ஒரு சில விரல் விட்டு எண்ணத்தகும் தோழர்களின் வியர்வை மட்டுந்தான் இதற்குத் துணை நின்றது. முன்னேற்றக் கழகமாம், பிரிவினையாம் என்றுதான் இங்குள்ளோர் பேசிக்கொண்டனர், எங்கும் உள்ளபடி. நாம் கட்சி கண்ட சில மாதங்களிலெல்லாம் நம்மைப்பற்றிக் கவலைப் படுபவர்களோ, இலட்சியம் செய்பவர்களோ ஆக யாரும் இருந்ததில்லை. அலட்சியத்தின் நடுவே நாம் அமைதியாகப் பணிபுரிந்தோம். கூட்டங்கள் நடத்தினோம். மக்கள் திரண்டனர். உண்மைதான். ஆனால் கூட்டம் முடிந்த மறு விநாடியிலேயே, நாம் வயிறு நோக, நெஞ்சு வலிக்கப் பேசிய பேச்சுக்கள் காற்றிலேபறக்க விடப்பட்டன. இந்த நிலையிலே மக்களிருந்தனர். என்றாலும் நமக்குமட்டும் ஓர் புது நம்பிக்கை, உணர்ச்சி உள்ளத்தை இயக்கிக் கொண்டிருந்தது. அந்த இயக்குதலின் வலுவிலே நாம் முன்னேறினோம். பணபலம் நம்பால் இல்லை. பணப்பெட்டிகள் சாய்வு நாற்காலிகளிடம் அடைக்கலம் போயிருந்தன. அவர்களோ நம்மவரின் எதிரிகளாகத் தம்மைக் காட்டியுங் கொண்டனர். இந்நிலையில் நமக்கிருந்த ஒரே பலம், ஆயுதம் (இப்போதும் அதுதான்) முயற்சியும் ஆர்வமும் குன்றா இளம் வாலிபர்களின் ஒத்துழைப்புதான். அவர்களின் ஈடு இணையற்ற முயற்சிதான் சென்ற ஆண்டு டிஸம்பர்மாதம் 29, 30 தேதிகளில் நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடாக உருவெடுத்தது. "மாநாடு வெற்றிகரமாக நடந்தது" மாற்றார்களே பேசிக்கொள்ளுகிறார்கள் இப்படி. நாமும் தான் கூறிக் கொள்ளுகிறோம். என்றாலும் குரலிலே காணும் பேதம் அவர்களைப் பொறுத்த வரை, மகிழ்ச்சியின் உதறலால்.

மாநாட்டிலே பொதுச் செயலாளரின் நிருபர்கள் பேட்டி, வியக்கத்தகுந்த வெற்றிக்கு, மலையாளப் பகுதியிலே நாம் அறிமுகம் ஆவதற்கு ஓர் காரணமாக இது அமைந்தது. மலையாளப் பத்திரிகை ஆசிரியர்கள் பலர் இங்கே குழுமினர். வினாக்களைக் கிளப்பினர்! விடை பெற்றனர்.

மாநாட்டின் மற்றொரு வெற்றி, பல கிளைக் கழகங்களுக்கு அடிப்படைக் கல் அமைத்தது. நாஞ்சில் தமிழகத்திலே வீசிய கட்சித் தென்றல், மலையாளப் பகுதியிலும் வீச ஆரம்பித்தது. பத்திரிகைக்காரர்கள் எழுத ஆரம்பித்தார்கள்! சட்டசபை பேசிற்று! மந்திரிகளின் 'உதடுகளைப் பிளந்து கொண்டு, நமது இலட்சிய ஒலிகள் உருண்டோடி வந்தன! குரலிலே பேதமிருந்தது! என்றாலும் கருத்திலேயிருந்த ஒருமையை யாரும் மறுக்க முடியாது. சென்ற மார்ச் 11-ம் தேதி கோட்டயம் எனுமிடத்திலே, கேரளர் சோஷியலிஸ்ட் கட்சியின் மாநாடு ஒன்று கூடிற்று, நிறைவேறிய தீர்மானம், "வடநாட்டாதிக்கம்ஒழிக" சுதந்திரகேரளம் தேவை, என்றொலித்தது.

சிறந்த எழுத்தாளர்கள் நம்மைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார்கள்! எழுதியும் விட்டார்கள்.

திருவிதாங்கூர் — கொச்சி ஐக்ய சமஸ்தானத்தின் தலைசிறந்த தினசரிகள் நம்மை அறிமுகம் செய்து வைக்கும் பொறுப்பை, தேவையின் காரணமாக எடுத்துக்கொண்டன! மிகச் சமீபத்திலே கூட 'பிரபாதம்' எனும் பத்திரிகையில் பரமேஸ்வரன் என்பவர் ஒரு கட்டுரை தீட்டியிருந்தார்; "திராவிடஸ்டேட்" என்ற தலைப்பில். மலையாளி—தமிழன் கலாச்சார ஒருமையை எடுத்துக் காட்டி, உருக்கொள்ளும் திராவிடஸ்டேட்டின் மூலம் பொருளாதாரம் வளரும் நிலைமையையும் தெளிவுபடுத்தி, பிரச்சினையின் ஆழத்தை வலியுறுத்தினார்.

அதுமட்டுமல்ல, மலையாளப்பகுதி க்தி ஆச்சாரக் கொடுமையால் தாலைப்பட்ட, படும்நாடு. வைதீக வறியர்களும், சனாதனக் கோணல் த்தி படைத்தோரும் இங்கே ராளம். மனிதனை மனிதன் என்று திப்பதற்குத் தயங்கிய பெருமை) இதையே சாரும். மனிதாபி ானத்தின்மேல் வைத்த கொடு ாளைத் தகர்த்தெறியத் தோன்றிய லைவர்களின் முயற்சி பல ஸ்தாப ங்களை உருவாக்கிற்று. அந்தஸ் ாபனங்கள் நமது சமுதாயக் காள்கைகளை மிகவும் ஆதரிக்கின் ன. பொதுவுடைமைக் கொள்கை ள் வலுப்பெற்ற கொள்கைகளாகி ிட்டன இங்கே. எனவே நமது பாருளாதாரக் கொள்கைகள் அவர்களால் ஆதரிக்கப்படுகின்றன. மது அரசியல் கோட்பாடுகள், தலில் அவர்களுக்குத் தெரிய ில்லை. ஆகவே அதுபற்றிப் பேச ில்லை. இன்று கௌரவிக்க உணரு கிறார்கள், அதன் வெற்றிகரமான ிளைவுகளைக் கண் கூடாகக் காண் கிறோம்.

மலையாளப் பகுதி, நிச்சயம் மது கட்சியின் இலட்சியத்திற் கேற்ற பூங்கா. இங்குள்ளோர் அதன் கொள்கைகளை தெரிவிக்கும் துயில்களே. அது நமது கட்டுப் பாடான முயற்சியிலே யிருக்கிறது.

இதுவரையிலும் நாம், நமது கட்சியின் குறிக்கோளை, மலையா ளப்பகுதியில் ஸ்தாபனரீதியாகப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்ட ில்லை. இந்த நிலையிலும் இவ்வளவு ஆதரவு, கட்டுப்பாடான ரீதியில் நாம் இன்றும் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தால்—தொலைவில் தெரிவ தாகக் காணும் வெற்றிவிளக்கு நிச் சயம் அண்மையில் இருக்கக் காண் போம்.

ஒரு கட்சியின் இலட்சியத்தைப் பரப்பும் வழிகளில் முக்கியமானது பத்திரிகை. கட்சியின் மூளையும் இதயமும் அப்பத்திரிகையிலே இருக்க மக்கள் காண்கிறார்கள். மலையாளப் பகுதியிலே நமது கருத் தைத்தெரிவிக்க ஒரு மாத இதழ் கூட யில்லை. அப்படியானால் நமது கொள்கையை அவர்கள் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? பிரச் சாரமிருந்தால் முடியும்.

அதற்கு மலையாளப் பேச்சாளர்கள் தேவை. அந்தத் தேவையை நிறை வேற்ற மலையாளப் பத்திரிகை தேவை. அதன்மூலம் மாணவர் உலகை, பாட்டாளிகள் தொடர்பை நாம் அடையமுடியும்.

இங்குள்ளோர் வேகமாக நம்மை உணர்வதற்கு அது ஒரு வாய்ப்பாக வும் அமையும். மத்திய செயற்குழு ஆராய்ந்து ஒரு நல்ல முடிவிற்கு வந்து அதையே நடைமுறைத் திட்டமாக ஆக்கினால், மலையாளத் திலே நமது கட்சி பரவும். நமது கொள்கையின் வெற்றியை எட்டுத் திக்கும் கொட்டும் முரசமாகவும் மாறும். அதுவே, நமது இலட்சியத் தின் தூதுவனாகத் தன்னை பற்றிக் கொள்ளும். முன்னேற்றக் கழகத் தின்முன்னேடும் பிள்ளையாக, மலை யாளப்பகுதி விரையும். அன்னாளை விரைவில் எதிர்பார்ப்போமாக!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டைச் சீரழிக்கும் இந்த நற் பணி, இங்குள்ள தேசாபிமானி களின் எதிர் காலத்தை, அதள பாதாளத்திலேயே ஆழ்த்தும்.

தாயைப் பிணமாக்கி விட்டு தாசிக்கு அபிஷேகம் நடத்தும், கேவலம்!

ஆனாலும், ஐக்கிய இந்தியா, என்று பேசி, ஆவலோடு, இத்திருப் பணியிலீடுபடுகிறார்கள்.

காரணம், பதவி! ஆமாம், பதவி ஆசை!—அல்ல, அல்ல—வெறி!!

சுயநலவெறி, இந்த சுகானுபாவர் களை உண்மையைப் படம் பிடிக்கும் நம்மீது பாயச்சொல்கிறது.

தேர்தல்! எம். எல். ஏ! மந்திரி, தலைவர்—என்கிற, பதவி ஆசைகள், சொந்தநாட்டின் வாழ்க்கையைக் கூட அடகு வைக்கத் தூண்டு கின்றன.

இவர்கள் கொட்டம் நீடிக்காது; மக்கள் மன்றத்தில் இவர்கள் பித்த லாட்டம் வெளியாகத் துவங்கிவிட் டது, எல்லோரும் உணரத்தலைப் பட்டுவிட்டனர்.

சுயநலத்துக்காக நாட்டைக் கெடுக்கும் நாசத்துரோகி — அவனை நம்பாதே! நம்பாதே!! நம்பாதே!?!

வருந்துகிறோம்

கலையுலகில், ஒரு பெரிய இழப்பு, நடிக நண்பர் பி. யு. சின்னப்பாவின் திடீர் மறைவு — சினிமாவானிலே புகழ்பெற்றுத் திகழ்ந்த அவர், 23—9—51-ல் மறைந்தார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம்.

அவர், சின்னஞ்சிறு வயதிலேயே கலையுலகுக்கு கிடைத்த நல்லபரிசு. சிறுவராக இருக்கும்பொழுதே, நாடகமேடைகளில் தோன்றி நல்ல பெயர் பெற்றவர். பிறகு சினிமா வானிலேயும் மின்னும் நட்சத்திர மானபொழுதும் புகழுடன் விளங் கினார்.

கலையுலகம், அவர் பிரிவால் வாடு கிறது. அந்த துக்கத்திலே நாமும் பங்கு கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக
மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ ஏ. மைதானத்தில் மாநில மாநாட்டிற்காக அமைக்கப்பட விருக்கும் பந்தல் வரைப் படம் தயாரிக்கப்பட்டு, பந்தலமைப்பு வல்லு நர் பார்வைக்கு அனுப் பப்பட்டுள்ளது.

முகப்பு அலங்கார அமைப்புகளை கவ னிக்க பிரபல ஓவிய நிபுணர்கள் பாலு பிர தர்ஸ் கேட்டுக் கொள் ளப்பட்டிருக்கிறார்கள்.

மின்சார விளக்கு அமைப்பு வேலைகளுக்குரிய அமைப்புத் திட்டம், அத்துறையில் புகழ் பெற்றவர்களி டமிருந்து கோரப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்திற்காக ரூ 1000, செங்கற் பட்டு மாவட்டத்திற்காக ரூ 1200, தஞ்சை மாவட்டத் திலிருந்து ரூ 1750, கோவை மாவட்டத்திற்காக ஈரோடு மாநாட்டு மூலம் ரூ 500, கோவை பொதுக் கூட் டத்தில் ரூ 900, வடார்க்காடு மாவட்டத்திற்காக, ஆரணியிலிருந்து ரூ 185, திருப்பத்தூரில் ரூ 1000 திருச்சி மாவட்டத்திற்காக குளித்தலையில் ரூ 250, ஆமதாபாத்தி லிருந்து ரூ 150, மதுரை மாவட்டத்திற்காக திண்டுக் கல்லில் ரூ 1000, தென்னாற்காடு மாவட்டத்திற்காக திண்டிவனத்தில் ரூ 500 வந்துள்ளன.

சேலம் மாவட்டத்திலிருந்து, மாவட்டக் கழகம் கூடி, பணத்தை அனுப்பிவிடுவதாக அறிவித்துள்ளனர். நாஞ் சில் மாவட்ட நன்கொடையை பெற்றுக்கொள்ள பொதுச்செயலாளருக்கு அழைப்பு வந்துள்ளது. மாவட் டங்களும் நிதி வசூலில் மிக மும்மரமாக ஈடுபட்டுள்ளன.

நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமியும் அவரது நண்பர்களும் நடிக்கும் சந்திரோதயம், சாக்ரடீஸ், ஜமீன் மாளிகை ஆகிய நாடகங்களுடன். பெண்களே முழுப் பங்கேற்று நடத்தும் போராட்டம் என்ற நாடகமும், குலமில்லேனு பில்லா என்ற தெலுங்கு நாடகமும் நடத்த முயற்சிகள் நடைபெறுகின்றன.

நம் கருத்துக்களை பரப்பிடும் நடனங்களை கலை நிகழ்ச்சியில் இடம் பெறச் செய்யவும் முயற்சி செய்யப் படுகிறது.

மாநாட்டில் பணி யாற்றும் தொண்டர் படையின் ஒரு பகுதி யினரை காஞ்சிபுரத் தில் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு, கொடி வணக்கம் பயிற்சியளிக் கவும் ஏற்பாடாகியிருக் கிறது.

ஓவியக் கண்காட்சிக் கான சித்திரங்கள் சென்னை சாந்தி ஆர்ட்ஸ் ஓவிய நிபுணர் மாதவ னிடம் ஒருபகுதி தயா ராகிக் கொண்டிருக்கி றது. காஞ்சியில் உலக அறிஞர்களின் படங்களும், அவர் கள் கூறிய பொன்மொழிகளும் நம் நெஞ்சையள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும், அவற்றினைக் கண்ட விஞ்ஞான மேதை களும் உள்ள ஓவியங்கள் பார்க்க பரவசமாகின்றன. அரசியல் கிண்டல் படங்கள் ஏராளம் தயாராகியுள்ளன.

திராவிடத்தின் விவசாய விளைவுப் பொருள்கள் அத்தனையும் திரட்டிக் காட்டவும் முயற்சி செய்யப் படுகிறது.

உலக நாடுகளும், அவைகளின் இன்றையத் தலை வர்களின் உருவங்களும் அழகாக அமைக்கப் பட்டிருக் கின்றன. திராவிட இயக்கத்தின் மறைந்த தலைவர்கள் உருவங்கள் மிகப் பெரிய அளவில் எழுதப்பட்டு, இயக் கத்தின் பண்டைச் சரித்திரத்தை நினைவூட்டுகின்றன.

பொதுச் செயலாளர், மாநாடு சம்மந்தமாக, இயக்க முக்கிய தோழர்களோடு ஆலோசித்து வருகிறார்.

மாநாட்டுக் காரியங்களை நேரிலிருந்து கவனிக்க பொதுச் செயலாளர் அடுத்த வாரத்திலிருந்து சென்னையி லேயே தங்கக் கூடும்.

மாநாட்டு முதல் விளம்பரம் முக்கிய நகரங்களில் ஒட்டப்பட்டுள்ளன. இதுவரைநான்குவகைதுண்டுவெளி யீடுகள், முக்கிய பொதுக்கூட்டங்கள் நடைபெறுமிடங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அடுத்த பெரிய சுவ ரொட்டியும், துண்டு வெளியீடுகளும் விரைவில் அனுப் பப்படும்.

விளம்பரக்குழு



Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.